மார்ச் 2012 மலர் 5 இதழ் 2

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY





## சென்னையில் மாஸ்டர்

புது வருட கொண்டாட்டங்கள் முடிந்ததும், மாஸ்டர் காயத்ரி செல்ல திட்டமிட்டிருந்தார். ஆனால் உடல் நலம் சரியில்லாமையால் அவர் ஓய்வு எடுக்க முடிவு செய்தார்.

மாலையில், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், மற்றும் வெவ்வேறு வெளி நாடுகளிலிருந்தும் வந்திருந்த அப்யாசிகளின் பெரிய குழு, மாஸ்டரை சந்திப்பதற்காக காத்துக் கொண்டிருந்தது. அவர் தன் அலுவலுகத்திலிருந்து வெளியே வந்ததும், "என்னை சந்திப்பதற்காக நீங்கள் எல்லோரும் அதிக அளவு பொறுமையுடன் நீண்ட நேரம் காத்திருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறினார். இதைச் சொல்லி விட்டு, வராண்டாவில் சுமார் பத்து நிமிடங்கள் நின்று கொண்டு, அங்கே கூடியிருந்தவர்களிடம் பேசிக்கொண்டு, தன்னுடைய விலை மதிக்க முடியாத நேரத்தை செலவழித்தார். ஜெர்மனி மற்றும் ஃப்ரான்ஸ் நாடுகளிலிருந்து அப்யாசிகள் வந்திருந்தனர். மாஸ்டர் வேடிக்கையாக பேசிக்கொண்டே, அவர்களிடம், "ஜெர்மனி ஒருசில விஷயத்திற்கு புகழ் பெற்றது, ஃப்ரான்ஸ் ரொட்டிக்கு புகழ் பெற்றது, இத்தாலி காபிக்கு புகழ் பெற்றது, இந்தியா ஆன்மீகத்திற்கு புகழ் பெற்றது." என்று சொன்னார்.

ஜனவரி 4 ஆம் தேதி மாஸ்டர், தியான மண்டபத்தில் சத்சங்கம் நடத்தினார். அடுத்த நாள், பார்கவ் லண்டனுக்கு செல்ல வேண்டியிருந்ததால், மாஸ்டர் 4 மணிக்கு எழுந்து பார்கவிற்கு விடையளிக்க வந்தார். அதற்குப் பின் மாஸ்டர் வெளியே அமர்ந்து கொண்டு, 5:30 மணியளவில் காபி அருந்தினார்.

7ஆம் தேதியன்று மாஸ்டர், மீடியா குழு பயிற்சி முகாமுக்கு சென்று, அந்த நாளின் பொருளான, "சகோதரத்துவம்" என்பதைப் பற்றிப் பேசினார். அவர் தனது பேச்சை, பின் வரும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே துவங்கினார். "நீங்கள் எல்லோரும் உண்மையான அப்யாசிகள்தானா? நீங்கள் எல்லோரும் உண்மையான அப்யாசிகள்தான் என்றால், சகோதரத்துவம் என்பதைப் பற்றிய பயிற்சி முகாமுக்கு என்ன அவசியம் என்பது எனக்குப் புரியவில்லை" நல்லுறவுடன் இணைந்து ஒன்றாக வேலை செய்வதற்கு இயலாத தனி மனிதர்களின் அகந்தையின் விளைவாக எழும் சண்டை, கருத்து வேறுபாடு, தனிக்குழுவாக செயல்படுதல் போன்றவற்றைக் குறிப்பிட்டார். மேலும், அப்யாசிகளையும் சேர்த்து எல்லாவற்றையும், தூக்கியெறிந்து விட்டு, ஒரு சில அப்யாசிகளை மட்டும் வீட்டில் வைத்து சமாளித்துக் கொண்டு, தான், பாபுஜி மஹாராஜுடன் இருந்த அந்த நாட்களுக்கு திரும்ப சென்று விட விரும்புவதாக கூறினார். அவர் மேலும் கூறியதாவது, "நீங்கள், மற்றவர்களுக்கும் புத்தி சாதுர்யம் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு சாதுர்யமாக உள்ள, உங்கள் புத்திசாலித்தனமான தலைக்குள், சிறிது அறிவை செலுத்துவீர்கள் என்று நம்புகிறேன்" என்றார். சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசுவதைக்காட்டிலும், அதைப் பயிற்சி செய்வதை அவர் வலியுறுத்தினார்.

### ஞாயிற்றுக்கிழமை ஜனவரி 8, 2012

சத்சங்கம் நடத்திவிட்டு, மாஸ்டர் தனது காட்டேஜுக்கு திரும்பினார். பிறகு சிறிது நேரம் கழித்து, ரஷ்ய பாடங்களை வாசிப்பதற்காக தனது அலுவலகம் செல்லும் பொழுது, தன்னைச் சந்திப்பதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்த அப்யாசிகளைப் பார்த்தார். "நீங்கள் எல்லோரும் இன்று காலை அற்புதமான சத்சங்கத்தைப் பெற்றீர்கள். வேறு எதையும் என்னிடம் எதிர்பார்க்காதீர்கள்" என்று வேடிக்கையாகச் சொன்னார்.

அவர், தன்னுடைய ரஷ்ய பாடங்களைப் படித்து முடித்ததும், தன்னுடைய அலுவலகத்தில் இருந்த அப்யாசிகளின் ஒரு குழுவிடம் பேசிக்கொண்டிருந்தார். மொழிகளைப் பற்றி பேசும் பொழுது, "ஒரு புதிய மொழியைப் படிப்பது ஆரம்பத்தில் ஒரு சில மொழிகள் தெரியும் வரைதான் கடினமாக இருக்கும். ஒரு சில மொழிகளைக் கற்றுக்கொள்ளும் செயல்பாட்டில் இறங்கி விட்டீர்களானால், மேலும் அதிகமான மொழிகளைக் கற்றுக் கொள்வது என்பது மிகவும் எளிதானது" என்றார். அவர் மேலும், "சந்தோஷத்தின் விலை நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமானது" என்றார்." எனக்கு அநேக விஷயங்கள் தெரியாததைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

### செவ்வாய்க்கிழமை, ஜனவரி 10, 2012

ஃப்ரான்ஸ் மற்றும் வெனிசுலாவில் இருந்து வந்திருந்த, சுமார் நாற்பது அப்யாசிகள் கூடத்தில் குழுமியிருந்தனர். மாஸ்டர் வந்து, அவர்களை வரவேற்றார். "யாராவது புதிய அப்யாசிகள் இருக்கிறீர்களா?" என்று மாஸ்டர் கேட்டார். ஒரு அப்யாசி மாஸ்டர் "நான் ஐந்து வருடங்களாக அப்யாசியாக இருக்கிறேன். நான் புதிய அப்யாசியா?" என்று கேட்டார். அதற்கு மாஸ்டர், “இல்லை, நீங்கள் ஒரு நல்ல அப்யாசி" என்றார். எல்லோரும் சிரித்தனர். "நான் ஐம்பது வருடங்களாக அப்யாசியாக இருக்கிறேன். ஆனாலும் இன்னும் எனக்கு கேள்விகள் இருக்கின்றன" ஆனால் தொன்மையான அறிவான அறிவியலைக் கற்றுக்கொள்வது போல் அல்லாமல் ஆன்மீகமானது பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்" என்று சொன்னார். மேலும் அவர், பாபுஜி அறிவின் ஒரு பெரிய அணைக்கட்டைப் போன்றவர் என்றும், ஆனால் அவரிடமிருந்து அந்த குழாயைத் திறந்து பெற்றுக் கொள்வதற்கு யாருமே இல்லை." என்றும் கூறினார். ஒரு முறை, ஒரு செமினாரின் பொழுது, பாபுஜி, அங்கே இருந்த அப்யாசிகளுக்கு





நிறைய கொடுக்க விரும்பியதையும், ஆனால் அதைப் பெற்றுக்கொள்ள யாரும் அங்கே இல்லாததன் காரணமாக வெட்ட வெளியில் சிதற வைக்க வேண்டி வந்ததை நினைத்து அவர் கண்களில் நீர் மல்கியதையும் நினைவு கூர்ந்தார்.

"நன்றி தெரிவித்தலுக்கும், நன்றியுணர்விற்கும் இடையே ஏதேனும் வேறுபாடு உள்ளதா?" என்று கேட்டதற்கு, “இவையிரண்டிற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. நன்றியுணர்வு இதயத்திலிருந்தும், நன்றி தெரிவித்தல் மனதிலிருந்தும் வருகின்றன,” என்று மாஸ்டர் கூறினார்.

## புதன், 2 ஜனவரி 2012

மாஸ்டர் காலை சத்சங்கம் நடத்தி, பின்னர் பத்து திருமணங்களை நடத்தி வைத்தார். மதியவேளையின் போது ஜம்முவில் உள்ள, புதிய ஆசிரமத்தின் நேரடி வீடியோ நிகழ்ச்சியை ஸ்கைப் (skype) மூலம் பார்த்தார். படத்தொகுப்பைப் பார்த்த பின், முழு ஆசிரமத்திற்கும் சென்றது போன்ற உணர்வு ஏற்பட்டதால், அப்யாசிகள் இதனை, தியானக்கூடத்தை திறந்து வைத்ததாக கருதி, தியானக் கூடத்தை உபயோகப்படுத்த தொடங்குமாறு கூறினார்.

ஜனவரி 12ம் தேதி, மாஸ்டர் காயத்ரிக்கு சென்று, மீண்டும் ஜனவரி 14ம் தேதி காலை 9 மணிக்கு ஆசிரமம் திரும்பினார்.

## ஞாயிறு, 15 ஜனவரி 2012

மாஸ்டர், ஒமேகா பள்ளியின் 12ம் வகுப்பு படிக்கும் அனைத்து குழந்தைகளையும், பிரஞ்சிற்கு அழைத்திருந்தார். பிரஞ்சிற்கு பிறகு, மாஸ்டர் வெயிலில் வந்து அமர்ந்தார். குழந்தைகளை மட்டும் அவருக்கு முன்பாக வந்து அமரச் சொல்லி, அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். "ஒருவன் வெற்றியைப் பார்க்கக்கூடாது, ஆனால் தோல்வியடையக் கூடாது", என்று கூறினார். கல்வியானது பள்ளியிலும், நன்னெறி மற்றும் நன்னடத்தை பள்ளியிலும், வீட்டிலும் கற்பிக்கப்படுகின்றன. இவையிரண்டும் ஒரு நதியின் இரண்டு கரைகளைப் போன்றது. கரைகள் இல்லையென்றால் நதி இல்லை. நதி நடுவில் வேகமாக ஓடும் என்பதையும், நாம் நதியின் நடுவில் இருந்து முன்னோக்கி வேகமாக சென்று, கரைகள் அதுபோன்றே இருபுறமும் இருப்பதை உணரவேண்டும் என்றும் கூறினார்.

ஜனவரி 17முதல் 22ம் தேதி வரை மாஸ்டர், ரஷ்யர்களுக்கான கருத்தரங்கத்தில் மும்முரமாக இருந்தார். ரஷ்யா மற்றும் முந்தைய CIS நாட்டு அப்யாசிகளுடன் பேசிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளையும் சிட்டிங் கொடுத்துக் கொண்டும், உரை நிகழ்த்தியும் கழித்தார். ஏறத்தாழ 500 அப்யாசிகளுடன் மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். அவர் குடியிருப்பில் இரவு உணவு அளித்து, அவர்களுள் சிலரை புதிய பிரிபெக்டுகளாக தயார் செய்தார். மேலும், சகோதரர்கள் சக்ரபாணி, கமலேஷ் பட்டேல் மற்றும் பி.ஆர்.கிருஷ்ணா ஆற்றிய உரைகளை மாஸ்டர் தன் குடியிருப்பில் இருந்து கொண்டே சிசிடிவி மூலம் பார்த்தார்.

மாஸ்டர், 2011 ஜனவரி 17 மற்றும் 19ம் தேதிகளில், பங்கேற்பாளர்களுக்கு உரை நிகழ்த்தினார். மாஸ்டரின் உரையில் கூறியதாவது:

### குணநலன்:

இது ஆன்மீக வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. ஆசைகள், வெளிப்புறத்தில் உள்ள பொருளில் இல்லை, நம் உள்ளே இருக்கிறது. ஆசைகள் எப்போதும் உள்ளார்ந்து இருக்கின்றன. அவை வெளிப்புற பொருளை காணும்போது சரியான கணத்தில் வெளிப்படுகின்றன. இந்த ஆசைகள், சபலம் ஆகியவற்றை நமக்குள்ளிருந்து சுத்திகரிப்பு செய்து வெளியேற்றுவதே, சகஜ மார்க்கத்தின் தனி சிறப்பு வாய்ந்த அம்சமாகும்.

### தேவைகள் மற்றும் விருப்பங்கள்:

தேவைகள் மற்றும் விருப்பங்கள் இரண்டிற்குமிடையே உள்ள வேறுபாட்டை அறிந்து, நம் வாழ்க்கையை நடத்த கற்றுக் கொள்ள வேண்டும். அனைத்து தேவைகளும், உணவு, உடை, இருப்பிடம் போல், அடிப்படை மற்றும் இன்றியமையாதது. அவை நிறைவேற்றப்படும். விருப்பங்களை நிறைவேற்ற முடியாது. "எளிமையாக இயற்கையுடன் ஒத்திருங்கள்" என்ற பாபூஜியின் வார்த்தைகளை, மாஸ்டர் மேற்கோள் காட்டினார்.





## திருச்சியில் மாஸ்டர்

ஜனவரி 23 திங்கள் கிழமை அன்று, மாஸ்டர் விமானம் மூலம் திருச்சிக்குப் புறப்பட்டார். அது தனிப்பட்ட பயணம் ஆக அமைய வேண்டிய ஒன்று. இருந்தபொழுதிலும் நிறைய அப்யாசிகள் அங்கே வந்திருப்பதாக மாஸ்டர் தெரிவித்தபொழுது, யாரோ ஒருவர், 'மாஸ்டர், நீங்கள் அனைவருக்கும் அனுமதி அளித்திருக்கிறீர்கள்' என்று கூறினார். மாஸ்டர் அவருக்கு பதில் அளிக்கையில், 'இங்கு பாருங்கள், இது லார்ட் ஆப் தி ரிங்ஸ் திரைப்படத்தில் வருவது போல் உள்ளது. அதில் ப்ரோடோ, கான்டல்ப்பிடம், "பாதி நாட்டவர்தான் அழைக்கப்பட்டிருந்தனர். இருந்தபொழுதிலும், மீதம் உள்ளவர்களும் வருகை புரிந்து உள்ளனர்," என்று கூறுவார், என்று கூறினார். அனைவரும் அதனை கேட்டு இனிமையாக சிரித்தனர்.

ஏறக்குறைய 142 அயல்நாட்டு அப்யாசிகள் மாஸ்டருடன் வந்தனர். ரஷ்யாவை சேர்ந்த கிட்டத்தட்ட 60 அப்யாசிகள் தரைவழி மார்க்கமாக வந்தனர். 24-ம் தேதி அன்று அவர் ஓய்வு எடுத்தார். மேலும், காலை நேர இளவெயிலில் அமர்ந்து, பறவைகளின் ஒலிகளையும், மற்றும் வெல்லத்தின் நறுமணத்தையும் உள்ளடக்கிய இயற்கையை ரசித்தார். ஒரு நல்ல சூழ்நிலை அனைவரையும் மூழ்கடித்தது. மேலும் அனைவரும், அந்த ஒப்பற்ற அருளை உணர்ந்தனர். உரையாடலின் போது அவர், "அனைவரும் பணம் கொடுக்கவோ, வாங்கவோ மாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்வார்களேயானால், ஊழல் நடைபெறுவதற்கான வழியே





இல்லை" என்று கூறினார்.

25-ம் தேதி அன்று காலை, மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்கு பிறகு நடந்த சாதாரண உரையாடலில் அவர், "குழந்தைகளை கவனித்து கொள்ளவேண்டும். எந்த ஒரு சமுதாயம், குழந்தைகள் மற்றும் பெண்களை கவனித்து கொள்வதில்லையோ, அது வளர்வதில்லை" என்று கூறினார். 26-ம் தேதி அன்று மாஸ்டர், கருணையுடன், அனைத்து அப்யாசிகளுக்கும் ஜானகி பண்ணையில் விருந்து கொடுத்தார். 27-ம் தேதி காலை, இளவெயிலில் அமர்ந்து, கீழ்வரும் விவரங்களை தெரிவித்தார்.

- ❖ பாபூஜி எப்பொழுதும் தாழ்ந்தே இருக்கும் இடது கண்ணை கொண்டிருந்தார். நான் ஒரு சமயம் அவரிடம் கண் பரிசோதனை செய்து கொள்ளலாமே என்று கேட்டபொழுது, அவர், அந்தக் கண்ணை எப்பொழுதுமே இதயத்தை நோக்கியே வைத்து இருப்பதாகவும், மற்றொன்று வெளித்தோற்றத்திற்காக இருக்கிறது என்றும் கூறினார்.
- ❖ வலிதான் விழிப்படைய வைக்குமே தவிர, இன்பமல்ல.
- ❖ பழைய நாட்களில் வால்வு இருக்கும் ரேடியோ உண்டு. பிபிசி கேட்பதற்காக, அந்த வால்வை நிறைய திருகி, அலைவரிசையுடன் சமன் செய்ய வேண்டி இருக்கும். நீங்களும் உங்கள் இதயத்திற்காக, அத்தகைய ஒத்திசைவைப் பின்பற்றவேண்டும்.

28-ம் தேதி, ஜானகி பண்ணையில், சகோதரர்கள் கணேஷ் மற்றும் குமரேஷ் அவர்களின் வயலின் இசை இருந்தது. அதனை மாஸ்டர் ரசித்தார். பண்ணையில் இருந்த வேளையில், புதிதாக பிறந்த இரண்டு கன்றுகுட்டிகளுக்கு, பத்மா மற்றும் மருதம் என்று பெயர் சூட்டினார். ஜனவரி 29-ம் தேதி, அவர் இரண்டு திருமணங்கள் நடத்தி வைத்தார். 30-ம் தேதி அன்று, மாஸ்டர் தஞ்சாவூர் செல்ல வேண்டி இருந்தது. அவருக்கு உடல் நலம் சரி இல்லாத காரணத்தினால், சகோ. கமலேஷ், வெளிநாட்டு அப்யாசிகளுடன் அங்கு சென்றார். இரண்டு சத்சங்கங்களை அங்கு அவர் நடத்தினார். பின்னர், ஆசிரமத்தையும், அப்யாசிகள் இருப்பிட காலனி இடங்களையும் சுற்றிப் பார்த்தார்.

## வியாழக்கிழமை 2 பிப்ரவரி 2012

திருச்சியில் நடைபெற்ற, பூஜ்ய லாலாஜி அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில், ஏறத்தாழ 2000 அப்யாசிகள், பங்கேற்றனர். மாஸ்டர், 6-ம் தேதி அன்று சென்னை புறப்பட்டார்.

## சென்னை திரும்புதல்

மாஸ்டர் 6-ம் தேதி சென்னை திரும்பினார். அப்யாசிகளுடன் பேசிக் கொண்டு இருக்கும்பொழுது அவர், விதி நமது வாழ்க்கையில் எவ்வாறு விளையாடுகிறது என்பதைக் குறிப்பிட்டார். மேலும், உமர் கய்யாமின் வரிகளை சுட்டி காட்டினார். "இவை அனைத்துமே இரவு, பகல் எனும் கட்டங்களினாலான சதுரங்கப் பலகையை போன்றவை. மனிதர்களைக் காய்களாகக் கொண்டு, விதி அங்கே விளையாடுகிறது. இங்கேயும், அங்கேயும், நெருக்கடி நிலையிலும், நகர்ந்து, காய்களை வெட்டி, மற்றும் ஒன்றன் பின் ஒன்றாக மூடு பாத்திரத்தில் போடுகிறது"

அவர் இந்த வரிகளைக் குறிப்பிட காரணம், நாம் எவ்வாறு சில விஷயங்களை திட்டமிடுகிறோம், ஆனால் விதி அதன் வழியில் பயணிக்கிறது என்பதை உணர்த்துவதற்குத்தான்.


ஆழ்ந்த சிட்டிங்கிற்கு பிறகு, எழுந்திருக்கவும், மற்றும் வேலைக்கு செல்வதற்கும், மிகவும் சிரமமாக உள்ளதாக அவர் பாபூஜியிடம் தெரிவித்திருந்தார். பாபூஜி பதிலளிக்கையில், "செயல்படுதல் உடலின் வாழ்க்கை, செயலாற்றாமை ஆன்மாவின் வாழ்க்கை" என்று கூறியிருந்தார். ஒரு மனிதனிடத்தில் ஆன்மா மென்மேலும் வளர்கையில், ஆன்மாவின் வாழ்க்கை அவனை மேற்கொள்கிறது. அது செயலாற்றாமை நிலையில் இருக்க விரும்புகிறது என்று மாஸ்டர் தொடர்ந்தார். அவர் அதை 'சகஜ சமாதி' நிலையுடன் தொடர்புபடுத்தினார். அங்கே ஒருவர் உணர்வுடன் இருப்பினும், முழுமையாக ஈர்க்கப்பட்டு, செயலற்ற நிலைமையில் இருக்கிறார். அதன் பிறகு மாஸ்டர், 'இப்பொழுது நான் உறங்க விரும்பினாலும், அதற்கு மாற்றாக, நான் சென்று என் மனோசக்தியை பயன்படுத்தி சில வேலைகளை செய்ய இருக்கிறேன்,' என்று கூறினார்.



புதன்கிழமை, பிப்ரவரி 8, 2012

மாஸ்டர், 'ஏஞ்சல்ஸ் அண்ட் டெமன்ஸ்' (Angels and Demons) என்ற புத்தகத்தின் தலைப்பைப் பற்றி வேடிக்கையாகக் குறிப்பிட்டு, இந்தப் படைப்பில் எவ்வாறு இரண்டுமே தேவைப்படுகிறது என்று கூறினார். அதன் பிறகு அவர் பகவான் சிவனைப் பற்றிப் பேசுகையில், எவ்வாறு அவர் கைலாச மலையில் பனியில் வீற்றிருக்கிறார் என்றும், அவரது பார்வையாளர்களில், ரிஷிகள், முனிகள், தேவர்கள், அசுரர்கள் மற்றும் துர்தேவதைகள் இருந்தனர் என்றும் கூறினார். அனைத்துப் படைப்புகளும் பகவான் சிவனின் நடனத்தைப் பார்க்கக் கூடியுள்ளனர். பகவான் விஷ்ணுவைப் பற்றிக் கேட்டபொழுது, விஷ்ணு இரக்கம் மற்றும் தயையின் அடையாளம் என்றும், அவருக்கு இத்தகைய பார்வையாளர்கள் இல்லை என்றும் கூறினார்.


மாஸ்டர் காயத்ரியில் ஒரு வாரம் இருந்துவிட்டு, பிப்ரவரி 18ம் தேதி மணப்பாக்கத்திற்குத் திரும்பினார்.




"இவ்வாறாக உண்மையான ஆன்மீகப் பயிற்சி என்பது, நம் மனதை ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் வைத்து, புத்தி மற்றும் இயல்புத்திறனில் நிதானத்தைக் கொண்டு வருவதுடன், ஆன்மாவின் இலகுத்தன்மையையும் உருவாக்குகிறது. அப்பொழுதுதான், உள் அமைதியும் சாந்தியும் உறுதி செய்யப்பட்டு, உயர் நிலையை அடைய ஏதுவாகிறது."

- பாபூஜி மகராஜ்
சத்யோதயம் (பக்கம் 62)


# புதிய வெளியீடுகள்





ஹார்ட் ஸ்பீக் 2006
மலையாளம்





ஹார்ட் ஸ்பீக் 2009
ஆங்கிலம்



ட்ரூத் எடர்னல்
தெலுங்கு





வாட் இஸ் சகஜ் மார்க்
ஆங்கிலம்




## எடர்னல் மெமொரீஸ்- பாகம் 1

இது, பல்வேறு மேலைநாட்டு அப்யாசிகளால் எடுக்கப்பட்ட, பாபூஜி மகராஜின் சில விலை மதிப்பற்ற படத்துணுக்குகளின் சிறிய தொகுப்பாகும். ஷாஜஹான்பூரில் வாழ்க்கை, வசந்த உற்சவம், 1982ம் ஆண்டு, டில்லியில் நடைபெற்ற, பூஜ்ய பாபூஜி மகராஜின் பிறந்த நாள் விழாக்கொண்டாட்டங்கள் பற்றிய சிறு கண்ணோட்டம் மற்றும் அவரது ஐரோப்பிய பயணம் ஆகியவை உட்பட்ட, பரந்த அளவிலான நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது.




## ஹார்ட் ஸ்பீக் 2009

இது, 2009ம் ஆண்டு, பூஜ்ய மாஸ்டரால் வழங்கப்பட்ட உரைகளின் MP3 ஆடியோ குறுந்தகடுகளின் தொகுப்பாகும். இத்தொகுப்பில் மொத்தம் 34 உரைகள் உள்ளன.




## நாமினேஷன் ஆப் சக்ஸஸர்

இதில், 2011, அக்டோபர் 3 ம் தேதி, கொல்கத்தாவில், சகோ. கம்லேஷ் பட்டேல், பூஜ்ய மாஸ்டரால் தன் வாரிசாக முன் மொழியப்பட்ட அறிவிப்பு மற்றும் மும்பாய், அகமதாபாத் மற்றும் சென்னையில், அவரைத் தன் பரிந்துரைக்கப்பட்ட வாரிசாக, அப்யாசிகளுக்கு அறிமுகப்படுத்தி ஆற்றிய சிறு உரைகள் ஆகியவை அடங்கியுள்ளன. மேலும், இதன் இறுதிப் பகுதியில், நம் மாஸ்டர் மற்றும் பாபூஜி மகராஜுடன், சகோ. கம்லேஷ் பட்டேலின் சில அரிய புகைப்படங்களைக் கொண்டுள்ள, ஒரு சிறிய புகைப்படத்தொகுப்பும் உள்ளது.




## இன்சான் பனோ

இந்த DVDயில், 2011, அக்டோபர் 9ம் தேதி, கௌஹாத்தியில், 'இன்சான் பனோ' என்ற தலைப்பில் மாஸ்டர் ஆற்றிய உரைகள் உள்ளன. இதைத் தொடர்ந்து, குர்காவ் ஆசிரமத்தில் நடைபெற்ற, மிகத் தெளிவூட்டும் வகையிலான முறைசாரா உரையாடல்கள் உள்ளன. ஹிந்தி மொழியில் உள்ள இவ்விரண்டு உரையாடல்களிலும் அவர், சகோ. கம்லேஷ் பட்டேலைத் தன் வாரிசாக, அங்கு கூடியிருந்த அப்யாசிகளுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

# 140 - வது ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்




"ஆகவே, உண்மையைத் தேடுபவர்களே, உண்மையிலேயே நீங்கள் ஆனந்தத்தைத் தேடினால், நீங்கள் உங்களுக்குள்ளேயே முயலுங்கள், ஆனந்தத்தை உங்கள் ஆன்மாவில் தேடுங்கள், ஆன்மாவின் நிலைகளைப்பற்றிய அறிவினைப் பெறுங்கள், உண்மையைத் தேடுபவர்களாக ஆகுங்கள், அப்பொழுது நீங்கள் முடிவில்லாத ஆனந்தத்தைப் பெறுவீர்கள்."

- பூஜ்ய லாலாஜி மஹராஜ்
ராம் சந்த்ராவின் படைப்புகள் (லாலாஜி) பக்கம் 29



பெங்களூரு

## கர்நாடகா

பெங்களூரு பரம் தாம் ஆசிரமத்தில், ஏறக்குறைய 1200 க்கும் மேற்பட்ட அப்யாசிகள், மிக உயரிய உற்சாகத்துடன், முழுநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முதல் பகுதியில், உரை வழங்கப்பட்ட பின்னர், தொடர்ந்து மேற்கோள்களிலிருந்து வினாக்கள் கேட்கப்பட்டன. அன்றைய தினத்தின் பொதுவான கருத்தாக, அப்யாசிகள் தங்கள் உணர்வுகளையும், எண்ணங்களையும் ஆய்வு செய்து, தங்களுக்கு தாங்களே உதவி செய்து கொண்டு, மாற்றம் அடையும் வகையில் அமைந்திருந்தது.

ஹுப்ளியின் பதிவேட்டில் காணப்பட்ட 225 அப்யாசிகள், பேலூர், தார்வாட், கடாக், நவல்குண்ட், நவ்நகர், புட்கல்கட், சிர்சி மையங்களிருந்து வந்திருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அவர், ஹுக்கா மற்றும் நான், டி.வி.டி தொகுப்பிலிருந்து ஒரு பகுதி காண்பிக்கப்பட்டது. பின்னர் அப்யாசிகள், ராம்சந்த்ராவின் படைப்புகளில் (லாலாஜி) இருந்து பல்வேறு தலைப்புகளில் பேசினர். பக்தி பாடல்கள், வினா-விடை நிகழ்வு, மதிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்த, இளைஞர்கள் வழங்கிய 'த்ரௌபதி கர்வபங்கா' குறு நாடகம் ஆகியன அன்றைய நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தவை ஆகும். சத்சங்கத்துடன் நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அநேகம் பேர், ஆசிரமத்தை விட்டுச் செல்ல விரும்பாத வகையில், அந்த சூழ்நிலை அமைந்திருந்தது.



ஆலுவா



ஹுப்ளி

குல்பர்கா மற்றும் பிதர் மையங்களிலிருந்து வந்திருந்த, 300 க்கும் மேற்பட்ட அப்யாசிகள், ஹும்னாபாத் விழா கூடத்தில் கூடியிருந்தனர். உள்ளூர் அப்யாசிகள் சிறப்பாக முன்னேற்பாடுகளை செய்திருந்தனர். நிறைய அப்யாசிகள் லாலாஜியை பற்றி பேசினர். குழந்தைகளால் பரத நாட்டிய நிகழ்ச்சி வழங்கப்பட்டது. சகோ. எச்.ஏ. காசி மற்றும் குழுவினரின் புல்லாங்குழல் இசையும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

## கேரளா

ஆலுவாயில், எர்ணாகுளம் மற்றும் இடுக்கி மாவட்டங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகள், சத்சங்கத்திற்கு ஒன்று கூடினர். அதன் பின்னர் சிறிய உரை நிகழ்த்தப்பட்டது. லாலாஜியின் வாழ்க்கை வரலாறு ஒளிபரப்பப்பட்டது. பல்வேறு மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகள் மற்றும் பிரிபெக்ட்கள், லாலாஜியைப் பற்றிய அனுபவங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். சகோ. இ. ராதாகிருஷ்ணன் ஆசிரமத்தை பற்றிய பாடலை பாடினார்.

காசர்கோட்டில் ஐரோப்பியக் கருத்தரங்கை பற்றிய டாகுமென்டரி - 'ஹெவன்' ஒளிபரப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து, உரைகள், தங்கமான அமைதி நேரம், பக்தி பாடல்கள் மற்றும் லாலாஜியைப் பற்றிய குறுநாடகம் வழங்கப்பட்டது. சத்சங்கத்துடன் அந்த நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.



ஹும்னாபாத்


ஸ்ரீ கங்காநகர்


ஜோத்பூர்


அல்வார்

## ராஜஸ்தான்

ஸ்ரீகங்காநகரில், சகோ. பாரஸ் பரீக் அவர்கள் இல்லத்தில், 120 அப்யாசிகள் குழுமியிருந்தனர். சத்சங்கத்திற்குப் பிறகு, லாலாஜி மஹராஜின் வாழ்க்கை வரலாறு படிக்கப்பட்டது. ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், விழாக்களின் போதும் எவ்வாறு ஒழுக்கத்தை கடைப்பிடிப்பது மற்றும் எவ்வாறு சகிப்புத்தன்மையினை வளர்த்துக்கொள்வது என்பது பற்றி சகோ.முன்ஷிலால் பேசினார். லாலாஜி பற்றிய குறுந்தகடு காண்பிக்கப்பட்டது. மதிய உணவுக்குப்பின்னர், மாஸ்டரின் உரைகளான "சச்சா ப்யார்" மற்றும் "ப்யார் படாயேன்" ஆகிய வீடியோக்கள் காண்பிக்கப்பட்டன. ஒவ்வொரு அப்யாசியும் இந்த விழாவில் திறந்த மனதோடு கலந்து கொண்டனர். மையப்பொறுப்பாளர் சகோ.முன்ஷி, அனைத்து அப்யாசிகளையும் ஞாயிறு சத்சங்கத்திலும், விழாக்களிலும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

385 அப்யாசிகளும், 62 குழந்தைகளும், ஜோத்பூர் ஆசிரமத்தில் குழுமி இருந்தனர். குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவு முறைபற்றி அற்புதமாக தயாரிக்கப்பட்ட குறுகிய நாடகம், அப்யாசிகளால் நடத்திக் காட்டப்பட்டது. பல்வேறு கலை நிகழ்ச்சிகள், மிகுந்த உற்சாகத்துடனும் அன்புடனும் குழந்தைகளால் நடத்திக்காட்டப்பட்டது. மாலை நேர சத்சங்கத்திற்குப் பின்னர், லாலாஜியின் வாழ்க்கையைப் பற்றிய செய்தி படம் காண்பிக்கப்பட்டது.

அல்வர் ஆச்ரமத்தில், 190 அப்யாசிகள், நாள் முழுமையினையும் சத்சங்கங்கள், குழந்தைகள் விளையாட்டு மற்றும் ஒரு நிமிட பேச்சு போன்றவற்றில் செலவழித்தனர். லாலாஜியின் வாழ்க்கையில் இருந்து, பல நற்குணங்கள் உதாரணத்துடன் நினைவு கூறப்பட்டன. மாஸ்டர் வலியுறுத்தும், தன்னலமற்ற அன்பு மற்றும் சேவை ஆகியவை, அன்றைய நாளின் முக்கிய குறிக்கோளாக இருந்தன.

பில்வாரா ஆசிரமத்தில், அருகாமையில் உள்ள கிராமங்களான ஷாபுரா, கங்காபுர், சிகார், பிஜெய்நகர், மற்றும் பனிடா ஆகிய இடங்களில் இருந்து, நூறு அப்யாசிகள் வந்திருந்தனர். சத்சங்கத்திற்குப் பிறகு, லாலாஜியின் வாழ்க்கை பற்றிய நிகழ்ச்சியும், பஜனை பாடல்கள் பாடும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. சில அப்யாசிகள், லாலாஜி மஹராஜின் புத்தகத்தில் இருந்து, அவருடைய போதனைகள் மற்றும் ஊக்கத்தினை அளிக்கும் வகையில் அமையப்பெற்ற நிகழ்ச்சிகள் ஆகியவற்றினை வாசித்தனர். "கீழ்ப்படிதல்" என்ற தலைப்பில் நாடகம் ஒன்று இளைஞர்களால் நடத்தப்பட்டது.

## மஹாராஷ்ட்ரா

மும்பை பன்வேல் ஆசிரமத்தில், சுமார் 600 அப்யாசிகள் குழுமி இருந்தனர். லாலாஜி மஹராஜ் வாழ்க்கையில் நிகழ்ந்த, பல்வேறு நிகழ்ச்சிகளை சுருக்கமாக தொகுத்து, குறுகிய நாடகம் நடத்தப்பட்டது, உரைகள் படிக்கப்பட்டு, பஜனைகள் பாடப்பட்டன. மதிய உணவுக்குப் பின்னர், லாலாஜி மஹராஜ் பற்றிய திரைப் படம் திரையிடப்பட்டது.

பூனாவில், சத்சங்கம், முற்பகல் உணவு மற்றும் பஜனையைத் தொடர்ந்து, சத்சங்கத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி மாஸ்டர் தெரிவித்த, சிறு சிறு செய்திகளின் தொகுப்புகள் படிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, "நித்திய சத்யம்" ("Truth Eternal") புத்தகத்தில் இருந்து, லாலாஜியின் வாழ்க்கை பற்றிய செய்திகள் தொகுத்து வழங்கப்பட்டன. லாலாஜியின் திரைப்படத்தில் இருந்து சிறு சிறு பகுதிகளாக திரையிடப்பட்டது. ஒவ்வொரு பகுதி முடிந்தவுடன், அப்யாசிகள் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அவருடைய தனிப்பட்ட குணத்தில் இருந்த, சூட்சுமமான விஷயங்களின் மீது அப்யாசிகள் கவனம் செலுத்தி, அவர் அனைவருக்கும் ஒரே மாதிரி இருந்ததைக் கண்டறிந்தனர். லாலாஜி, அவருடைய உலகியல் வாழ்க்கையும், ஆன்மீகமும் சம நிலையில் இருக்கும்படி அமைத்துக்கொண்டார். மாலை சத்சங்கத்திற்கு முன்னதாக, பரத நாட்டிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

அவுரங்கபாத் அருகில், லாதூரில், சுமார் 150 அப்யாசிகள், அருகில் இருந்த மையங்களில் இருந்து வந்து கலந்து கொண்டனர். சகோ.ஸன்ஜய் பாட்டியா, அவருடைய வாழ்வில் சகஜ மார்க்கம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து பேசினார். சகோதரி அனுசுயா, ஞாயிறு சத்சங்கத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி பேசினார். சகோ.சுனில் சந்திரன், குருவின் முக்கியத்துவத்தைப்பற்றி, அற்புதமாக உரையாற்றினார். மாலை சத்சங்கத்துடன் அன்றைய நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## அஸ்ஸாம்

கௌஹாத்தியில், சத்சங்கத்துடன் விழா தொடங்கியது. பின்னர், லாலாஜியின் எளிய வாழ்க்கை குறித்தும், அவர் குடும்ப பிரச்சினைகளை சமாளித்த விதம் குறித்தும், உரை நிகழ்த்தப்பட்டது. ஜனவரியில் வெளியிடப்பட்ட எக்கோஸ் இந்தியா செய்தி மடல் குறித்து, வினா விடை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி, அப்யாசிகள் இந்த செய்தி மடலினைப் படிப்பதற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது. குழந்தைகளுக்கான ஓவியப் போட்டியும் நடத்தப்பட்டது.


பூனே


மும்பாய்


கௌஹாத்தி


மிர்சாபூர்


லக்னௌ

## உத்தர பிரதேசம்

லக்னௌ ஆசிரமத்தில் ஏறத்தாழ ஐந்நூறு அப்யாசிகள் கூடினர். சத்சங்கத்திற்கு பிறகு, லாலாஜியின் வாழ்க்கைக் கதை வாசிக்கப்பட்டது. பின்னர், லாலாஜியைப் பற்றிய திரைப்படம் திரையிடப்பட்டது. அது, அனைவரையும் தங்கள் வாழ்க்கையை அகத்தாய்வு செய்யத் தூண்டியது. சகோதரிகள் பஜனைகள் பாடினர்; குழந்தைகள் நடனமாடினர்; மற்றும், இளைஞர்கள், 'வாழ்க்கையில் என்ன நடந்தாலும் அது நன்மைக்கே' என்பதைப் பற்றி ஒரு நாடகம் நடத்தினர். அங்கு நிலவிய சூழல் இலகுவாகவும் அருள் நிறைந்ததாகவும் இருந்தது. அனைவரும் அருள் நிறைந்த இதயங்களுடன் வீடு திரும்பினர்.

மிர்சாபூரில், ஆசிரமத்திற்காக புதிதாக வாங்கப்பட்டிருக்கும் நிலத்தில் விழா நடத்தப்பட்டது. அப்போது, அலகாபாத் மைய பொறுப்பாளரான, சகோதரர் ஆர்.ஆர்.கே. திரிவேதி அவர்களும் உடனிருந்தார். அத்தருணத்தில் சில பிரெசெப்டர்கள் உரையாற்றினர். ஒரு கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மாஸ்டரைப்பற்றிய ஒரு படம் போட்டுக் காண்பிக்கப்பட்டது. அதன் பின்னர், சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவுற்றது.


திருப்பூர்

## உத்தராகண்ட்

காசிபூர் மையத்தில், சத்சங்கத்தைத் தொடர்ந்து, லாலாஜி மகராஜின் வாழ்க்கை பற்றிய ஓர் உரை நிகழ்த்தப்பட்டது. அங்கு வந்திருந்த சுமார் நாற்பத்தைந்து அப்யாசிகள், லாலாஜியின் வாழ்க்கைப் பண்புகளைப் பற்றி கலந்துரையாடும்பொருட்டு, குழுக்களாக பிரிக்கப்பட்டனர். அந்த குழுக்கள் தங்கள் குறிப்புகளை கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து ஒரு தெளிவுறுதல் பகுதி இருந்தது. அனைவரும், நாள் முழுவதும் அவர் நினைவிலிருந்தவாறே, அவர் மீதான மதிப்பு மிகுந்த பக்தி, ஆழ்ந்த மரியாதை மற்றும் அன்பினால் நிரப்பப்பட்டிருந்தனர். மதிய உணவிற்குப் பிறகு, சில பஜனைகள் பாடப்பட்டன. பயிற்சியைப் பற்றிய தெளிவுறுதலுக்குப் பிறகு, சத்சங்கத்துடன் அந்நாள் நிறைவுக்கு வந்தது.

## ஒரிசா

கட்டக்கில், ஒரிசா மண்டலத்தைச் சேர்ந்த 136 அப்யாசிகள் பங்கேற்றனர். மனித இனத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கான, லாலாஜி மகராஜின் போதனைகள் பற்றிய கலந்துரையாடலில் பங்குபெறும்பொருட்டு, சத்சங்கத்திற்குப் பிறகு, அப்யாசிகள் மீண்டும் கூடினர். அந்த கலந்துரையாடல், உயிரோட்டம் மிக்கதாக இருந்தது. இளம் அப்யாசிகள் கலந்துகொண்டது, ஊக்கமளிப்பதாக இருந்தது. ஒரு பிரெசெப்டர் சந்திப்பு, ஒரு வரவேற்புக் கூட்டம் (பதினைந்து பங்கேற்பாளர்கள்), மற்றும் ஒரு கலை நிகழ்ச்சி ஆகியனவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

## தமிழ்நாடு

திருப்பூர் மற்றும் அருகிலுள்ள மையங்களிலிருந்து வந்திருந்த, 750 அப்யாசிகளால், திருப்பூர் வைர விழா பூங்கா நிரம்பியிருந்தது. சத்சங்கங்கள் மட்டுமின்றி, மூன்று மாஸ்டர்கள் பற்றிய சொற்பொழிவுகளும், ஒலி-ஒளி காட்சிகளும் ஒரு ஆனந்தமயமான சூழலை உருவாக்கின. சில சமயங்களில், நமது மேன்மைமிக்க மாஸ்டர்களின் வாழ்க்கையைப் பற்றி நுண்மையாகவும் மென்மையாகவும் குறிப்பிடப்பட்டபோது, இதயங்கள் ஒருமித்து உருகின. சுவைமிக்க காலைச் சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் மாலைத் தேனீருடன் அப்யாசிகள் உபசரிக்கப்பட்டனர். அப்யாசிகள் அனைவரும், அவரது அருளால் நிரப்பப்பட்ட இதயங்களுடன் வீடு திரும்பினர்.

## ஜார்க்கண்ட்

சத்ராவில், சத்ரா மற்றும் ஹசாரிபாக் மையங்களிலிருந்து வந்திருந்த சுமார் முப்பது அப்யாசிகள் கூடியிருந்தனர். கேள்வி பதில் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ராஞ்சி மையம் முழுநாள் நிகழ்ச்சிக்காக நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு, லாலாஜியின் வாழ்வைப் பற்றிய திரைப்படம் திரையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து சில பஜனைகள் பாடப்பட்டன.

ஜாம்ஷெட்பூரில் 38 அப்யாசிகள் கூடினர். அங்கே அவர்கள் 'நித்திய சத்தியம்' புத்தகத்திலிருந்து வாசித்தனர். அதனைத் தொடர்ந்து ஓர் உரையாற்றலும், கேள்வி பதில் நிகழ்ச்சியும் இருந்தன.


காசிபூர்


கட்டாக்

# ஆசிரம வளர்ச்சிகள்

## ஜம்மு ஆசிரமம்



ஜம்மு ஆசிரமம்

இந்தியாவின் வட மாநிலமான ஜம்மு காஷ்மிரில், முதன் முதலாக மையம் மற்றும் ஆசிரமம் அமைக்கப்பட்டது. ரஞ்சித்பூர், கோல்கஜ்ரல், ஜம்மு என்ற கிராமத்தில் ஆசிரமமானது, ரயில் நிலையத்திலிருந்து சுமார் 10 கி.மீ தொலைவிலும், விமான நிலையத்திலிருந்து 11கி.மீ, மற்றும் பேருந்து நிலையத்திலிருந்து 6கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

2 பிப்ரவரி 2011-ல், ஆசிரமத்திற்கென்று ஒரு ஏக்கர் நிலம் வாங்கி, அதில் சுமார் 2800 சதுர அடியில், சமையலறையும், உணவுக்கூடமும் கட்டப்பட்டன. தியான அறை கட்டும் வரை, இவ்விடமே தியானத்திற்கும் பயன்படுத்தப்படும்.

ஜம்மு ஆசிரமத்தின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ அடங்கிய படத்தொகுப்பை, மாஸ்டர் தனது சென்னை அலுவலகத்திலிருந்து, 11 ஜனவரி 2012 அன்று பார்த்தார். அதன் பின், "நான் இந்த ஆசிரமத்திற்குள் ஏற்கனவே நுழைந்து விட்டேன், ஆசிரமம் துவங்கப்பட்டுவிட்டது. இன்றே இந்த அறையில் தியானத்தைத் தொடங்குங்கள்" என்று மாஸ்டர் கூறினார். அதே நாள் மாலை 5 மணிக்கு, முதல் சத்சங்கம் நடத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து தினமும் சத்சங்கம் நடத்தப்பட்டு வருகிறது.




தார்வாய் ஆசிரமம்


பய்யனூர் ஆசிரமம்

## தார்வாய், உத்திர பிரதேசம்

1983-ல், அலகாபாத் நகரிலிருந்து 13கி.மீ தொலைவில் அமைந்துள்ள தார்வாய்-லிருந்து, சில மக்கள் மிஷனில் அறிமுகமானார்கள். மேலும் அவர்கள் அலகாபாத் மையத்தில் நடைபெறும் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். பிரிபெக்ட் சகோ.L.K.திருப்பதி மற்றும் சகோ. சுபாஷ் சந்த்ர மிச்ரா ஆகியோரின் முயற்சியால், சுமார் 800சதுர மீட்டர் அளவில் நிலம் வாங்கி, 22 மார்ச் 2006 அன்று பதிவு செய்யப்பட்டது.

ஊர் MLA மற்றும் MP அவர்களின் பொருளாதார உதவியினால், அவர்களின் விருப்ப நிதியிலிருந்து, 1000சதுர அடியில், (25'x 40') தியான அறை கட்டப்பட்டுள்ளது. மற்றக் கூடுதல் வசதிகள் அனைத்தும், அப்யாசிகளின் நன்கொடையிலிருந்து சமாளிக்கப்பட்டது. 11 டிசம்பர் 2011 அன்று, முறைப்படி தியான அறையை, செயலாளர் சகோ.U.S.பாஜ்பாய், சத்சங்கம் நடத்தி திறந்து வைத்தார். திறப்பு விழாவில், அலகாபாத் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மையங்களிலிருந்து, அப்யாசிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

## பய்யனூர் ஆசிரமம், கேரளா

கண்ணூர் மாவட்டத்தில், பய்யனூர்-சிம்மேனி சாலையில் பய்யனூரிலிருந்து 10கி.மீ தொலைவில் ஆசிரமம் அமைந்துள்ளது. அகல் பரப்புக் காட்சியுடன் கூடிய அழகான இடம், 3 ஏக்கர் அளவில், 2007ம் ஆண்டு வாங்கப்பட்டு, அப்யாசிகளால் மிஷனிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. ஆசிரம இடத்திற்கு அருகில், குடியிருப்பு ஒன்றை அப்யாசிகள் அமைத்துள்ளனர். தற்காலிகமாக 100அப்யாசிகள் இருக்கும் அளவிற்கு, தியான அறை கட்டப்பட்டுள்ளது. தற்போது 60-75 அப்யாசிகள், ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்தில் தவறாமல் கலந்து கொள்கிறார்கள்.

29 ஜனவரி 2012, ஞாயிற்றுக்கிழமை, சத்சங்கத்திற்கு பின், சுமார் 75 அப்யாசிகள் திடலில் கூடினர். CIC சகோ. குன்ஹிகண்ணன், சமையல் மற்றும் கழிவறைகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். அதன்பின் அனைவரும் இவ்விடத்தில் தியானம் செய்தனர். பெரிய தியான அறையும், மாஸ்டர் குடிலும், கட்டுவதற்கான திட்டங்களும் உள்ளன.

## பயிற்றுநர் மேம்பாட்டு நிகழ்ச்சி - II

பனசங்கரி ஆசிரமம், பெங்களூர்



இந்த நிகழ்ச்சி, பெங்களூர் பனசங்கரி ஆசிரமத்தில், 36 அப்யாசிகளுக்கு மூன்று கட்டங்களில் (16 அக்டோபர், 5 மற்றும் 6 நவம்பர், 26 மற்றும் 27 நவம்பர் 2011) நடத்தப்பட்டது. பங்கேற்பாளர்களின் பயிற்சிமுறை மற்றும் மாஸ்டருடனான அவர்களின் தொடர்பு ஆகியவற்றை ஆழப்படுத்துதல், சகஜ மார்க்கம் பற்றிய ஆழ்ந்த அறிவை அவர்களிடத்தில் ஏற்படுத்துதல் மற்றும் ஆன்மீக அவா உள்ளவர்களிடம், சகஜ மார்க்க சிறப்பம்சங்களை, தகுந்த முறையில் எடுத்துரைக்கச் செய்தல் போன்றவை, இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சி, குழு கலந்துரையாடலில் தொடங்கி, ஒரு குறிப்பிட்ட தலைப்பில் ஒரு குழுவினிடத்தில் உரையாற்றுவது என்பதுவரை வளர்ச்சியடைந்தது. அதனைத் தொடர்ந்து, இரண்டு, மூன்று நிமிடங்கள், மேடையில், தேர்ந்தெடுக்கப்பட்ட கூற்றுகளின் அர்த்தங்கள் பற்றி பேசினர். முடிவில் அவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில், வெவ்வெறு பிரிவுகளைச் சேர்ந்த குழுவினர்கள் (அப்யாசிகள், மாணவர்கள், இல்லத்தரசிகள் போன்றோர்) மத்தியில், 20 நிமிடங்கள் பேசும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். தலைப்புகள் பற்றி தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தும் திறமை, மற்றும் அவர்களின் மொழிவளம் போன்றவை கண்காணிக்கப்பட்டு, அவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு, சபை உறுப்பினர்கள் கருத்துக்கள் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சி, சகோ. G.சுப்ரமண்யா, சகோ. கிருஷ்ணமூர்த்தி, சகோ. பிரபாகர், சகோதரி மாதுரி போன்றோர் உதவியுடன், சகோ. ஸ்ரீநிவாசா அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது.

## விளையாட்டு தினம்


ஜெய்ப்பூர், ராஜஸ்தான்

ஜெய்ப்பூர் மையம், 1 ஜனவரி 2012 அன்று, விளையாட்டு தினத்தைக் கொண்டாடியது. சுமார் 120 அப்யாசிகள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சி, அப்யாசிகளிடத்தில் ஒற்றுமையை வளர்ப்பதற்காக நடத்தப்பட்டது. அதில், நொண்டியடித்தல் போட்டி, கயிறு இழுக்கும் போட்டி, முதியோர்களுக்கான போட்டி போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்றன. வெற்றிபெற்றவர்கள் மற்றும் போட்டியில் ஒழுங்குடன் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு, பரிசுகள் வழங்கப்பட்டன.

வருடத்தில் முதல் நாள் நடைபெற்ற ஒரு முழு நாள் நிகழ்ச்சி, பெருந்தன்மை, நட்பிணக்கம் ஆகியவை கொண்ட மனநிலையை உருவாக்கியதுடன், சகோதரத்துவம் மற்றும் ஒழுங்குமுறையை, பங்கேற்ற அப்யாசிகளின் இதயத்தில் ஏற்படுத்தியது.

## சாதனா, லட்சியம் மற்றும் அவா தொடர்பான இளைஞர் கருத்தரங்கு, ஹைதராபாத்

ஹைதராபாத் மண்டல மையத்தில், 10-12, பிப்ரவரி 2012 அன்று நடைபெற்ற கருத்தரங்கில், 55 அப்யாசிகள் மற்றும் 12 பிரசெப்டர்கள் பங்கேற்றனர். மாஸ்டரின் கூற்றுக்கள் மற்றும் SRCM புத்துணர்வு மையப்படங்கள், ஒரு கண்கூடாகப் பார்க்கக் கூடிய, சாதகமான சூழலை உருவாக்க, பெரிதும் உதவின.




முதல் பகுதியில், சாதனா மற்றும் நாட்குறிப்பேடு எழுதுதல் பற்றி இருந்தது. அதனைத் தொடர்ந்து, பிரசெப்டர்களுடன், தங்களுடைய தினசரி பயிற்சிக்கு இடையூறு விளைவிப்பவை பற்றிய தீர்வுகளை அறிந்து கொள்ளும்பொருட்டு நேரம் செலவிட்ட அப்யாசிகளுக்கு, தனி தியானம் கொடுக்கப்பட்டது.

சனிக்கிழமையன்று, மாஸ்டரின் இரண்டு உரைகள் பற்றிய கையேடுகள், படிப்பதற்காகவும், தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவதற்காகவும் கொடுக்கப்பட்டது. மதிய உணவைத் தொடர்ந்து, அப்யாசிகள் தங்களுடைய குழந்தைப் பருவ நினைவுகளை வெளிகொணர்ந்த விளையாட்டுகளில் பங்கேற்றனர்.

சகோதரர் மாலிக் பங்கேற்பாளர்களை வரவேற்றதைத் தொடர்ந்து, சகோதரர் பாலாஜி 'லட்சியம்" என்ற தலைப்பில் உரையாற்றினார். பின்னர், பங்கேற்பாளர்கள், சகஜ மார்க்க லட்சியம் பற்றிய தங்கள் கருத்துக்களையும், தொடர் பயிற்சியின் மூலம் அவர்களுடைய லட்சியம் பற்றிய கண்ணோட்டம் எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்தது என்பது பற்றியும் பகிர்ந்து கொண்டனர்.

ஞாயிறன்று, இந்த நிகழ்ச்சி, அப்யாசிகள் தங்களின் குணநலங்கள் காக்கப்படவேண்டியதின் அவசியத்தை மையக் கருத்தாகக் கொண்டிருந்தது. மாஸ்டரின் சமீபத்திய உரையான, "குணத்தைப் பராமரித்தல்" பற்றிய கையேடுகள் கொடுக்கப்பட்டன. எளிமையான சிறிய மாற்றங்களை நம் வாழ்க்கையில் இணைத்து, நம் ஆன்மீக அவாவிற்குப் பொருந்தும் வகையில், நம் வாழ்வினை எவ்வாறு உருவாக்கிக் கொள்வது என்பது பற்றிய கலந்துரையாடல், சகோதரி அர்ச்சனா அவர்களால் நடத்தப்பட்டது.

மதிய வேளையில் மாஸ்டரின் வீடியோ காட்சி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் மௌனமாக உள்நோக்கி ஆய்வு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். நிகழ்ச்சி பற்றிய பங்கேற்பாளர்களின் விமர்சனங்கள் இதயத்தைத் தொட்டன. பங்கேற்பாளர்கள், இது போன்ற கருத்தரங்குகள் அதிக அளவில் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.



# கட்டுரைச்சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

## அஹமத்நகர்

பிப்ரவரி 11ம் தேதியன்று, கட்டுரை நிகழ்ச்சி குழு, அதில் பங்கேற்ற பள்ளிகளுக்குச் சென்று, பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கியது. ஸ்ரீ சிவாஜி சைனிக் பள்ளிக்கும், சிவ்ஷங்கர் வித்யா மந்திருக்கும் சென்று அவர்கள் பரிசுகள் வழங்கினர். இவ்வருடம், அஹமத்நகர் மையம், மண்டல அளவில் இரண்டு பரிசுகள் வென்றது. சகஜ மார்க்கத்தை பற்றி அறிய ஆவலுற்ற ஆசிரியர்களுக்கு, ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது.

## நாசிக்

பிப்ரவரி 11ம் தேதியன்று, கட்டுரைப்போட்டியில் பங்கேற்றவர்களுக்காகவும், அதில் வெற்றி பெற்றவர்களுக்காகவும் விழா நடத்தப்பட்டது. இதில் 10 மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் கலந்து கொண்டனர். பங்கேற்ற சுமார் 30 பேரும், மிகுந்த கவனத்துடன், SRCM ஐ பற்றிய முன்னுரையை செவி மடுத்தனர். அவர்கள், ஒழுங்கான வாழ்க்கையை மேற்கொள்ளும் விழிப்புணர்வை, இளைஞரிடையே ஏற்படுத்தும் மிஷனின் சிறப்பான பணியை மிகவும் பாராட்டினர். சகோ. தௌன்க் பரிசுகள் வழங்கினார். வென்றவர்களுக்கு "Tell Me Master" புத்தகமும், பேனாவும் பரிசளிக்கப்பட்டன.



## பெங்களூரு

பனசங்கரி ஆசிரமத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், மங்களூரைச்சேர்ந்த 16 வயதுடைய யஷஸ்வி நாயக் பேசுகையில், எப்பொழுதெல்லாம் தன் தந்தை மங்களூரை விட்டு வெளியே செல்கிறாரோ அப்பொழுதெல்லாம், தான் தினசரி பூஜைக்குச் சென்று வருவதாகவும், அதைத்தான் ஆன்மீகம் என்று தான் நினைத்துக் கொண்டிருந்ததாகவும், இங்கு வந்து பல பேச்சாளர்களின் உரைகளை செவி மடுத்த பின்னர்தான், மனித இனத்திற்குச் செய்யும் சேவையே, உண்மையான ஆன்மீகம் என்பதை உணர்ந்ததாகவும் கூறினார்.

வெற்றி பெற்ற 11 கல்வி நிலையங்களிலிருந்து, 30 விருந்தினர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர். கிழக்கு கர்நாடக மையத்திலிருக்கும் 330க்கும் மேற்பட்ட கல்வி நிலையங்களிலிருந்து, 3300க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.





# பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தின் 8வது ஆண்டு விழா

## கொல்கத்தா, மேற்கு வங்கம்

2011, டிசம்பர் 24ம் தேதியன்று, குளிர்ந்த காலை வேளையில், போண்டல், ஃபரக்கா, ஜார்கண்ட் மற்றும் கொல்கத்தாவிலிருந்து வந்திருந்த சுமார் 70 அப்யாசிகள், விழா கொண்டாடினர். காலைப்பகுதியில் தியானம் பற்றியும், மாலைப்பகுதியில் சுத்தகரிப்பு பற்றியும் விவரிக்கப்பட்டன. அவர்கள், 5 நிமிடம் தியானத்தில் அமர்ந்து, உள்ளார்ந்த தெய்வீக ஒளியுடன் ஒன்றுணரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதன் பின் அவர்கள் 5 குழுக்களாக பிரிக்கப்பட்டு, பத்து நியமங்களையும் அவை மீதான பதவுரையையும் படித்தபின் அவைகளின்





உள்ளார்ந்த கருத்துகளை உள்வாங்கிக் கொள்ளும்படி அமைப்பாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டனர். குழந்தைகளை நாள் முழுவதும் பார்த்துக்கொள்ளும் வண்ணம், அவர்களுக்காக செறிவுடன் கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளை, குழந்தைகள் மையம் தொகுத்து வழங்கியது.

### டிசம்பர் 25, குழந்தைகளுக்கான விளையாட்டு தினம்

ஞாயிறு சத்சங்கத்திற்குப்பின், வருடாந்திர விளையாட்டு விழா, குழந்தைகள் மையத்தில் நடைபெற்றது. சிறுவர்கள், பெரியவர்கள் மற்றும் தாத்தா, பாட்டிகள் இதில் பங்கேற்று மகிழ்ந்தனர். மதிய விருந்திற்குப்பின் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை சத்சங்கத்திற்குப்பின் நிகழ்ச்சிகள் யாவும் முடிவுற்றன. வார விடுமுறை நாட்களை இனிதே கழித்த பின், ஒழுங்கு முறையாக சாதானாவை கைக்கொள்ள பங்கேற்றவர் அனைவரும் உறுதி பூண்டனர்.

## நற்பண்புகள் உருவாக்கம் குறித்த நிகழ்ச்சி

பிகானீர், ராஜஸ்தான்.



2012-ம் வருடத்தின் முதல் நாளில், "நற்பண்புகள் உருவாக்குவதின் முக்கியத்துவம்" குறித்த அரை நாள் நிகழ்ச்சிக்காக, அப்யாசிகள் வரவேற்கப்பட்டிருந்தனர். பங்கேற்பாளர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும், நற்பண்புகள் உருவாக்கம், ஒழுக்கம், அன்பு, தன்னடக்கம், தியாகம் போன்றவை உள்ளிட்ட நான்கு தலைப்புகள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவின் சார்பில் இருந்தும் ஒருவர், கலந்துரையாடலில் பெற்ற கருத்துகளைத் தொகுத்து வழங்கினார். அன்பு, தியாகம் மற்றும் சுய மதிப்பீட்டின் மூலமாக, சமுதாயம் மற்றும் பொருள் சார்ந்த உலகில் ஒரு அப்யாசி எதைப் பிரதிபலிக்க வேண்டும் என்று மாஸ்டர் விரும்பினாரோ, அதையே அக்கருத்துக்கள் அனைத்தும் காண்பித்தன. சகோதரர் மான்சிங் இன்டா, "சுய மதிப்பீட்டின் மூலமாக எதிர்மறைத் தன்மையை நீக்குதல்" குறித்துப் பேசினார். அர்ப்பணிப்பினால் கிடைக்கும் பயன்கள், நம்மீது மாஸ்டர் செலுத்தும் அன்பு, அதற்கு கைம்மாறாக நாம் நடந்து கொள்ள வேண்டிய விதம், குறித்து சகோதரர் கம்லேஷ் பட்டேல் அவர்கள் அனுப்பிய மின்னஞ்சலின் சிறப்புக் கூறுகளை, சகோதரர் அனில் குமார் அவர்கள் வாசித்தார். நிகழ்ச்சியானது ஒரு நன்றி உரையுடன் நிறைவு பெற்றது.

## அச்சிடுதல் வடிவமைப்பு முறை குறித்த பயிற்சி பணிமனை, மும்பை

"அச்சிடுதல் வடிவமைப்பு முறை" குறித்த இரண்டு நாள் பயிற்சிப் பணிமனை ஒன்று, பன்வேல் ஆசிரமத்தில், 31 டிசம்பர் 2011 அன்றும், 1 ஜனவரி 2012 அன்றும் நடைபெற்றது. நமது மிஷனுக்கான துண்டுப்பிரசுரங்கள், பட்டியல்கள், அறிவிப்பு வாசகங்கள், புத்தகங்கள் முதலியவற்றை வடிவமைப்பதில் ஆர்வமுடைய அப்யாசிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக, இந்த பணிமனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. புனே, மும்பை, ஜல்காவ் மற்றும் நாசிக் பகுதிகளில் இருந்து 15 பங்கேற்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பயிற்சிக் கையேடானது, வடிவமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளையும், ஒரு வரைவு வடிவமைப்பை உருவாக்கும் பொழுது, அடிப்படைக் கோட்பாடுகளை உபயோகிப்பதன் முக்கியத்துவத்தையும் உள்ளடக்கி இருந்தது. தெளிவான கலைப்படைப்புகளை உருவாக்கும் பொழுது உதவக்கூடிய வகையில், பங்கேற்பாளர்களுக்கு மென்பொருள் குறித்த பயிற்சியானது வழங்கப்பட்டது. பயிற்சியில் செய்முறைப் பயிற்சிக்கான பகுதியே மேலோங்கி இருந்தது. வடிவமைப்பிற்கான கோட்பாடுகளைப் பயன்படுத்தி, அறிவிப்பு வாசகங்களை வடிவமைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இந்த பயிற்சியானது பங்கேற்பாளர்களால் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், விரிவடைந்து வரும் இந்த குழு வழங்கக் கூடிய வடிவமைப்பினால், நமது மிஷனானது பலன் அடையும்.

## மன அழுத்தத்தை நிர்வகித்தல் குறித்த கருத்தரங்கு

ஜெய்ப்பூர், ராஜஸ்தான்.

எச்.டி.எப்.சி. ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின், ஜெய்ப்பூர் மண்டல அலுவலகத்தில், 8 ஜனவரி 2012 அன்று, கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. எச்.டி.எப்.சி. ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் கிளை மேலாளர்கள், இதில் பங்கேற்பாளர்களாகக் கலந்து கொண்டனர். மனதை ஒழுங்குபடுத்துவதன் மூலமாக, மன அழுத்தத்தை நிர்வகிப்பதற்குக் கற்றுக் கொள்வதற்கும், தியானத்தின் மூலம் உள்முகமாக பயன் அடைவதற்கும், சகஜ மார்க்கம் என்ன வழங்குகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கும் விருப்பமுடையவர்கள், இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியானது, திரு. சந்தீப் நாயர் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜெய்ப்பூர் மைய பொறுப்பாளர், சகோதரர் மனோஜ் நாகர் அவர்கள், இந்நிகழ்ச்சியை நடத்தினார். இன்றைய போட்டி நிறைந்த உலகில், தியானமானது, எப்படி பயனுள்ளதாகவும் மற்றும் உதவிகரமானதாகவும் இருக்க முடியும் என்பது குறித்து அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியானது, ஒரு கலந்துரையாடல் பகுதியாக அமைந்தது. குழுவில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு விதமான வினாக்களை எழுப்பி, தங்களுடைய சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொண்டனர். இந்த கருத்தரங்கானது, கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு வழிகாட்டுதலாக அமைந்தது.



## ஸ்பெக்ட்ரம் ஆன்மீகக் குழுவின் நந்தத் ஆசிரம வருகை

27 ஜனவரி, 2012 அன்று, ஸ்பெக்ட்ரம் ஆன்மீகக் குழுவில் இருந்து, 15 பெண்கள் ஒரு குழுவாக, சகஜ மார்க்கத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக, நந்தத் பாட்டா ஆசிரமத்திற்கு வருகை தந்திருந்தனர்.

கேள்வி - பதில் பகுதி ஒன்று, சகோதரி சுப்தா ஆப்தே அவர்களால் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்கள் அனைவரும், பொருள் பொதிந்த பதில்களை வெளிப்படுத்தினர்.

பிறகு அதனைத் தொடர்ந்து, சகஜ மார்க்கத்தின் முழு விவரங்களையும் உள்ளடக்கிய அறிமுக உரையானது, சகோதரி சுரபி மற்றும் சகோதரி வைத்யா அவர்களால் கொடுக்கப்பட்டது. சமையலறை தன்னார்வத் தொண்டர்கள் தயார் செய்திருந்த சுவையான மதிய உணவுடன் அவர்களது வருகை நிறைவு பெற்றது. விருந்தினர்கள் அனைவரும் ஆசிரம மரங்களின் நிழலில் அமர்ந்து மதிய உணவு உண்டு மகிழ்ந்தனர்.



## ஒளி மையம்

## குல்பர்கா ஆசிரமம்

### பாபுஜி விதைகளை விதைக்கிறார்

வடக்கு கர்நாடகாவில் உள்ள குல்பர்கா, ஒரு பிரதேச தலைநகரம் ஆகும். மேலும் அது, பாமினி பேரரசின் பிறப்பிடமாக இருந்தது.

1957ம் ஆண்டு இங்கு மிஷன் ஆரம்பிக்கப்பட்டது. மறைந்த சகோதரர் S.A. சாரநாத்ஜி, இம்மையத்தின் முதல் அப்யாசிகளின் குழுவில் ஒருவர் ஆவார். அதன் பிறகு, பல வருடங்களுக்கு அவர் மிஷனின் காரியதரிசியாக தொண்டாற்றினார். பாபுஜி குல்பர்காவிற்கு 1957, 1963 மற்றும் 1968ம் ஆண்டுகளில், வருகை புரிந்து, இம்மையத்தை வளர்த்தார்.

1957, டிசம்பர் 15 அன்று, குல்பர்கா மைய ஆண்டுவிழாவில் தனது செய்தியில், அவர் சகஜ மார்க்கத்தை, எளிய முறையில், அன்போடு இவ்வாறு விவரித்தார்.... "என் சொந்த அனுபவ அடிப்படையில், மிகவும் எளிதாக எல்லோராலும் தொடர்ந்து செய்ய முடியும் ஒரு எளிய செயல் முறையை நான் பரிந்துரைக்கிறேன். ஒருவர் தனது இதயத்தை விற்கமுடியும் என்றால், அதாவது அவரது இதயத்தை தெய்வீக மாஸ்டருக்கு ஒரு பரிசாக அளித்து விட்டால், மேற்கொண்டு செய்ய ஏதுமில்லை. இது, இயற்கையாக, ஆதியந்தமில்லா உண்மை நிலைக்குள், உட்கிரகிக்கப்படும் நிலைக்கு அவரைக் கொண்டு செல்லும்."

### ஆசிரமமும் அதன் நடவடிக்கைகளும்

இம்மையம் இப்போது, சுமார் 450 அப்யாசிகளைக் கொண்டதாக வளர்ந்திருக்கிறது. ஞாயிறு சத்சங்கத்திற்கு சராசரி 170 பேர் வருகிறார்கள். செடாம் சாலையில், ரயில்நிலையத்திலிருந்து 5கி.மீ. தூரத்தில் உள்ள தற்போதைய ஆசிரமத்திற்கு, 1993, மார்ச் 24ம் தேதி, மாஸ்டர் அடிக்கல் நாட்டினார். பின்னர் மே 13 அன்று அதனைத் திறந்து வைத்தார். அது, 18,000 ச.அடி பரப்பளவில், 300பேர் அமரக்கூடிய தியானமண்டபம், விடுதி, அலுவலக அறை, சமையலறை, கழிப்பறைத்தொகுதி, புத்தகக்கடை மற்றும் நூலகம் ஆசியவற்றைக்கொண்ட இரட்டைமாடிக் கட்டிடம் ஆகும். சத்சங்கம் ஞாயிறு அன்றும், செவ்வாய், புதன், வியாழன் மாலைகளிலும் நடைபெறுகிறது. தனி அமர்வுகள், வெள்ளியன்று மாலை நடத்தப்படுகின்றன. தன்னார்வலர்களின் அர்ப்பணிப்புள்ள குழு, பல்வேறு மிஷன் நடவடிக்கைகளில் எப்போதும் இயங்கிவருகிறது.

### சரணாகதியின் ரகசியம்

மாஸ்டர் 1984, 1987, 1989, 1990, 1993, 1994, 1998 மற்றும் 2002ம் ஆண்டுகளில் வருகை புரிந்து, இந்தமையம் மற்றும் ஆசிரமத்தின் வளர்ச்சியில் பங்கு பெற்றுள்ளார். கடைசியாக 2002ல் வருகை புரிந்தபோது, சரணாகதி மற்றும் ஆன்மீக முன்னேற்றம் பற்றிய ரகசியத்தை மாஸ்டர் வெளியிட்டார். அது மாஸ்டருக்காக உழைப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. "சரணாகதி என்பது ஒரு சொல். ஆனால் அது அத்தியாவசியமான பற்பல மனப்பான்மைகளை உள்ளடக்கியுள்ளது. நான் பின்பற்றும் மிக எளிதான வழி, உங்களுக்குத் தெரிந்ததே. நான் அவரது வேலையைச் செய்து கொண்டே போகிறேன். அதுவும் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது."

### எதிர்காலம்.

இம்மையம், சமீபத்தில், செடாம் சாலையில், மேலும் 34 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளது. அதில் 12 ஏக்கர் மிஷனுக்கும், மீதமிருப்பது குடியிருப்புக் காலனிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மாஸ்டர், புதிய ஆசிரமத்திற்கு "பாபுஜி மெமோரியல் ஆசிரமம், குல்பர்கா" என்றும், குடியிருப்பிற்கு, "யோக ஜீவனா என்க்ளேவ்" என்றும் பெயரிட்டுள்ளார். வளர்ச்சி இந்த அடுத்த நிலைக்கு வந்திருப்பதுடன், குல்பர்காவின் மிக விரைவான எதிர்கால வளர்ச்சியின் அறிகுறி தென்படுகிறது.









**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.